**சீதாவக்க பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சீதாவக்க பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீதாவக்க பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| குறித்த நியமங்களுடன் தொடர்புடனான இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமத்தின் 3.9 பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் அதாவது ஆரம்ப பாதீடு, இறுதி பாதீடு மற்றும் அதற்கு இடையே பொருண்மையான வேறுபாடுகள் இருந்தால் அதற்குரிய காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை | நியமங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் அதில் உள்ளடக்கப்பட்ட சகலதையும் வெளிப்படுத்து வதற்கு அறிவுறுத்தலொன்று இடம்பெறாததுடன் எதிர்காலத்தில் இது தொடர்பாக தகவல்களை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் வெவ்வேறாக இனங்காணக்கூடிய வகையில் அனைத்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்த வேண்டும். |
| (ஆ) நியமத்தின் 6.3 பிரிவின் பிரகாரம் சபையிடமுள்ள அனைத்து நிலையான சொத்துக்களையும் | சபையிடமுள்ள அனைத்து நிலையான சொத்துக்களையும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்கள் என்பன நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | என்பவற்றின் கீழ் வெளிப்படுத்தப்படுத்துவதற்காக வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்கள் என்பன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றினை கணக்கீடு செய்வதற்காகவும் கணக்குகளைத் தயாரிப்பதற்கு முன்னர் குறித்த தகவல்களை பெற்றுக் கொள்வவதற்கு போதியளவு காலம் இல்லாமையால் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நியமத்தின் 6.14 (ஆ) பிரகாரம் சொத்தொன்றின் பயன்பாட்டு ஆயுட் காலத்தை தீர்மானிப்பதற்காக பிரதேச சபையால் சொத்துக்களை விளைவற்ற வகையில் வைத்திருக்கும் போது மேற்கொள்ளப்படும் உரிமை மற்றும் பராமரிப்பு போன்ற செயற்பாட்டு கூறினையும் கருத்திற் கொள்ள வேண்டிய போதிலும் அவ்விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டி ருக்கவில்லை | RA 7616 மற்றும் SL 7792 ஆம் இலக்க உழவு இயந்திரத்தை கைதவிர்ப்பதற்கு இருந்தமையால் பயன்பாட்டு ஆயுட்காலம் தீமானிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேம | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நியமத்தின் 9.8 பிரிவின் பிரகாரம் அரசினால் கையளிப்பு, நூலக மற்றும் மருந்து உதவிகள் பெறுவனவு அல்லது பெறவேண்டிய காலப்பகுதியில் மீண்டெழும் வரவுகள் இனங் காணப்பட்டிருக்கவில்லை. | திட்டவட்டமாக கிடைக்கும் காலம் முன்னர் தெரியப்படுத்தாமை மற்றும் ஆண்டின் இறுதியில் கிடைக்கும் போது கணக்குகளில் உள்ளடக்குவதற்கு போதியளவு காலம் இல்லாமையால் கடன்கொடுத்தோரின் கீழ் அடுத்த ஆண்டின் கையளிப்பு தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | நியமத்தின் 9.9 பிரிவின் பிரகாரம் ஏனைய விரிவான வருமானத்தில் உள்ள மீண்டெழும் தன்மையிலான அரசிடமிருந்து கையளிக்கும் உரிமையின் புறம்பான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ரூபா 18,460,134 என காண்பிக்கப்பட்டிருந்த போதும் அப்பெறுமதி இனங்காணப்பட்ட முறை வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | ரூபா 18,460,134.12 என குறிப்பிடப்பட்ட பெறுமதி இப்பெறுமதி வைத்தல் தொடர்பாக அறிந்திராமையால் தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அது சீராக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நியமத்தின் 11.9 பிரிவின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்களுக்கான நிதி ஏற்பாடு தொடர்பான காலப்பகுதி ஆரம்பத்தின் போதும் இறுதியின் போதும் முகப்பு பெறுமதி காலப்பகுதியில் சேர்த்தல் அல்லது கழித்தல், பயன்பாட்டிற்கு எடுக்காத பெறுமதி போன்றவை தொடர்பாக ஒப்பிடப்பட:டு வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அடுத்த ஆண்டுகளின் போது இந்த வெளிப்படுத்தல் தொடர்பாக உள்ளூராட்சி மன்ற திணைக்களம் வழங்கும் ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய மூலதன மானியம் ரூபா 105,088,590 கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 123,548,724 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | விரிவான வருமானக் கூற்றில் உரிய சீராக்கங்களை செய்து பிரதி ஒன்றை சமர்ப்பிக்கின்றேன். | |
| (ஆ) | விரிவான வருமானக் கூற்றில் மீண்டெழுமல்லாத செலவினங்களுக்காக அரசிடமிருந்து வழங்கலாக ரூபா 10,508,859 தொகைக்கு பதிலாக மொத்த மூலதன மானியம் ரூபா 105,088,590 தொகையை கணக்கீடு செய்த காரணத்தினால் ரூபா 94,579,731 தொகை கூடுதலாக மூலதன மானியம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | விரிவான வருமானக் கூற்றில் உரிய சீராக்கங்களை செய்து பிரதி ஒன்றை சமர்ப்பிக்கின்றேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் இனங்காணப்படாத மூலதன மானியத்தின் கீழ் ரூபா 94,579,731 கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 18,460,134 தொகை கணக்குகளில் கணக்கீடு செய்தமையால் ரூபா 76,119,597 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உரிய சீராக்கங்களை செய்து குறைவு சீராக்கப்பட்டது. | |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 55 ஆம் நாட்குறிப்பின் மூலம் மீளாய்வாண்டின் கைத்தொழில் கடன்கொடுத்தோர் ரூபா 15,632,758 கணக்கீடு செய்யும் போது நடைமுறை வேலைக்குப் பதிலாக மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கி தவறினை சரி செய்வதாக அறிய தருகின்றேன். | |
| (உ) | உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 2017 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உரிமை மாற்றங்கள் கூற்றில் இனங்காணப்படாத மூலதன மானியத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் இறுதிக் கணக்குகளில் இது தொடர்பாக சீராக்கி சமர்ப்பிகின்றேன். | |
| (ஊ) | கெம்பக்டர் வண்டிக்காக செலுத்த வேண்டிய கடன் தவணை தொகையான ரூபா 1,084,000 தொகை செலுத்த வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பரிமாற்றம் இடம்பெறாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெற வேண்டியவையாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் இது தொடர்பாக புதிய கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் உரிய குறைபாடுகளை தயாரித்து சமர்ப்பிக்கின்றேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (எ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான ரூபா 2,352,400 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (ஏ) | பொருத்திகளுக்காக மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வு ரூபா 1,611,495 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,208,621 என கணக்கீடு செ்த காரணத்தினால் மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வு ரூபா 402,874 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2021 இன் இறுதிக் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (ஐ) | சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படும் ஆண்டில் பெறுமானத்தேய்வு செய்யப்படவில்லையென கணக்கீட்டு கொள்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,893,073 ஆன நூலகப் புத்தகங்களுக்காக பெறுமானத்தேய்விற்காக நூலகப் புத்தகங்கள் ரூபா 289,307 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2021 இன் இறுதிக் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் துன்தான பொது மயானத்தின் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 21,589,738 தொகை செலவிடப்பட்டு கட்டிடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் அது கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆதனங்கள் சபைக்கு கையேற்கப்பட்டதன் பின்னர் கட்டிடஉக பதிவேட்டில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பேன் | |
| (ஓ) | முன்னைய ஆண்டுகளுக்குரிய வீதிகள், மதகுகள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 8,688,785 பெறுமதியான வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்கள் என்பன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 இன் போது இதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன் | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஔ) | 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 12,194,401 காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை | புதிய கணக்கீட்டு முறைமையொன்றாக இருப்பதால் இது தொடர்பாக விடுபாடுகள் இடம் பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்கின்றேன். | |
| (ii) | மீளாய்வாண்டிற்குரிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு ரூபா 28,151,170 ஆக இருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 393,663,485 ஆன மறை பெறுமதியொன்றும் மூலதனச் செலவினமாக ரூபா 365,512,314 ஆக உள்ளடக்கப்பட்டிருந்தது. | புதிய கணக்கீட்டு முறைமையொன்றாக இருப்பதால் இது தொடர்பாக விடுபாடுகள் இடம்பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்கின்றேன். | |
| (iii) | நிதிச் செயற்பாடுகளினால் கிடைத்த காசுப் பாய்ச்சலில் உள்ள மூலதன பெறுவனவின் கீழ் சேவைக் கட்டணங்களுக்காக கிடைத்த ரூபா 122,000 உள்ளடக்கப்பட்டிருந்தது. | புதிய கணக்கீட்டு முறைமையொன்றாக இருப்பதால் இது தொடர்பாக விடுபாடுகள் இடம்பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்கின்றேன். | |

| | | | |
|---|---|---|---|
| (iv) | தொழிற்பாட்டு செயற்பாடு களிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 24,858,075 பெறுமதியான முற்பண கொடுப்பனவு மற்றும் முற்பணம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய கணக்கீட்டு முறைமையொன்றாக இருப்பதால் இது தொடர்பாக விடுபாடுகள் இடம்பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்கின்றேன். | |
| (v) | கிடைத்த வட்டி வருமானம் ரூபா 6,497,248 ஆன முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் சபையால் வழமையான செயற்பாடு களிலிருந்து கிடைத்த வருமானமாக மிகைக்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. | புதிய கணக்கீட்டு முறைமையொன்றாக இருப்பதால் இது தொடர்பாக விடுபாடுகள் இடம்பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்கின்றேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (vi) | காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாடு களிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சலில் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் குறைவு மற்றும் அதிகரிப்பு வெவ்வேறாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையால் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. | புதிய கணக்கீட்டு முறைமையொன்றாக இருப்பதால் இது தொடர்பாக விடுபாடுகள் இடம் பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்கின்றேன். | |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,356,058 ஆக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 94,876,737 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **நிலுவை வீத வரி** | | |
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 12,548,778 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை | 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அரசினால் சலுகை வழங்குதல் மற்றும் பணத்தை | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு விரைவில் |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சேகரிப்பதறற்காக வீடு வீடாக செல்ல சுகாதார விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டியிருந்தமையால் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக ஆதனங்களை தடைசெய்யும் நடவடிக்கைகள் இடம் பெறவில்லையென தயவுடன் அறிய தருகின்றேன். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி ரூபா 67,454 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும்<br>-----------------------------------------------------<br>மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் பெற வேண்டிய ரூபா. 49,000,000 ஆன நீதிமன்றத் தண்டப்பணத்தையும் ரூபா. 196,125,951 ஆன முத்திரைக் கட்டணங்களையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்றத் தண்டப்பணத்தையும் முத்திரைக் கட்டணங்களையும் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைத்தல் இடம்பெறுகின்றது. அதன் பிரகாரம் கிடைத்த அல்லது கிடைக்காத ஆண்டிற்குரிய பெறவேண்டியதாக பாதீட்டில் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை குறித்த ஆண்டிற்காக நிலுவை தொகையுடன் சேர்த்து கணக்கிடப்படும் | அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தையும் முத்திரைக் கட்டணங்களையும் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |